அவையில் சொல்லக்கூடிய நிலைமையில் உள்ளது என்று ஏற்றுக் கொள்ளவேண்டும். அவ்வாறு ஒப்புக்கொள்ளாமல் அறையிலேயே தீர்ப்பளிக்கப்பட்ட பிறகு அந்தத் தீர்ப்பை பெற மறுத்து மீண்டும் அவையிலே அந்தப் பிரச்சினையை எழுப்புவது இந்த மன்றத்தின் மரபைக் காப்பதாக இருக்காது.

DR. H. V. HANDE : As a mark of expressing my deep regret, with great anguish I wish to stage a Walk-out on the issue of the Veterinary College strike. I am walking out alone and not my party, because the subject happens to pertain to my constituency.

(டாக்டர் எச். வி. ஹாண்டே அவர்கள் மட்டும் வெளிநடப்புச் செய்தார்கள்.)

(3) கவன ஈர்ப்பு

(அ) சேலம் உருக்காலைத் திட்டம் குறித்து ஜப்பானியக் கம்பெனி முகவர்களுடன் நடந்த உரையாடல்கள்

THIRU N. S. V. CHITHAN : Sir, I call the attention of the Hon. the Minister for Education and Industries to a matter of urgent public importance, namely, the talk with the Japanese Firm Delegation about the 16th November 1968 on the question of Salem Steel Plant.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கீழ்க்கண்ட அறிக்கையை அறிவிக்க முன் வருகிறேன்.

ஜப்பான் நாட்டைச் சேர்ந்த திரு. மாருபேனி-ஐடா கம்பெனி நிறுவனம் கஞ்சமலை இரும்புக் கனிப் படிவங்களை மேம்படுத்துவதில் இரும்புக்கனி உருள்களை உருவாக்குவதில் ஆர்வம் காட்டி வந்துள்ளது. அக் கம்பெனியின் முகவர்கள் 1968, நவம்பர் 15-ல் முன்னாள் கல்வி-தொழில் அமைச்சர் அவர்களைச் சந்தித்தார்கள். இவ்வுரையாடல்கள் பொதுத் தன்மை வாய்ந்தவை. ஜப்பானில் இப்போது தொடர்ந்து நடைபெற்றுவரும் சோதனைகளின் முடிவுகள் கிடைத்த பின்னர் இதுபற்றி மேற்கொண்டு விவாதிக்கலாமென ஒப்புக் கொள்ளப்பட்டது. இம்முடிவுகள் இப்போது பெறப்பட்டுள்ளன; திட்ட அதிகாரிகள் இம் முடிவுகள் பற்றி ஆய்வு செய்து வருகின்றனர்.

திரு. என். எஸ். வி. சித்தன் : சேலம் இரும்பு எஃகு தொழிற்சாலை எப்போது உற்பத்தியை ஆரம்பிக்கும் ? உற்பத்தித் திறன் எவ்வளவு இருக்கும் ? அங்கு உற்பத்தியாகும் இரும்புக்குத் தற்போது நம் நாட்டிலே தேவை எப்படி இருக்கும் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தாதுப் பொருளை எப்படி எடுப்பது, எப்படிப் பயன்படுத்துவது என்ற முதல் முயற்சிகளுக்குத்தான் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அதற்குப் பிறகு உருக்காலை அமைப்பது பற்றி மத்திய அரசு; திட்டக்குழு பரிசீலித்த பிறகுதான் விவரங்களைக் கூறமுடியும்.